நலிந்த கலைஞர்களுக்கு இந்த ஆண்டு முதல்

# கூடுதலாக 2500 கலைஞர்களுக்கு மாதம் ரூ.3000 நிதியுதவி - ஆணைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப்.6

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் சார்பாக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக நலிந்த கலைஞர்களுக்கு மாதம் தோறும் 3,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 6,542 நலிந்த கலைஞர்கள் மாதம் தோறும் 3,000ரூபாய்நிதியுதவிபெற்றுபயனடைந்து வருகின்றார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற விண்ணப்பித்துள்ள தகுதி வாய்ந்த அனைத்துக் கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கிடும் வகையில், 2025-2026-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், இத்திட்டத்திற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட, தகுதிவாய்ந்த 2,500 நலிவுற்றநிலையில்வாழும்கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (5.9.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமி நாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். க.மணிவாசன் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், அருங்காட்சி யங்கள் துறை ஆணையர் மற்றும் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி. கவிதாராமு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.








திருச்செந்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகராட்சி ஆய்வுக் கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர் மன்றத்தலைவர் சிவ ஆனந்திரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர்கள் மணல்மேடு சுதாகர், ஆனந்த், செந்தில் மற்றும் பலர், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் நடைபெற்ற நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு சகோதரர் இல்லத் திருமண விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் – கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று மணமக்கள் மாரியப்பன்,சுகன்யா ஆகியோர்க்கு வாழ்த்து தெரிவித்தார்.உடன் அமைச்சர் மனோ தங்கராஜ்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பிரபாகரன்,சித்திக், மாநில நிர்வாகி ஆவின் ஆறுமுகம், ஜார்ஜ் கோசல் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார், தமயந்தி, சுடலை கண்ணு,செல்வகருணாநிதி,ஜோசப் பெல்சி,எரிக்ஜுடு உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




தி.மு.க.
இளைஞர் அணி

சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட கொளத்தூர், திரு.வி.க. நகர் மற்றும் அம்பத்தூர் தொகுதி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட கொளத்தூர், திரு.வி.க. நகர் மற்றும் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதி, வட்ட, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 06.09.2025 சனிக்கிழமை மாலை 4 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. கொளத்தூர், திரு.வி.க. நகர் மற்றும் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 05-09-2025

கலைஞர் 100 1924 - 2023

